# செய்தி வெளியீடு

**அமைச்சர் அலுவலகம்**

# *ஒன்ராறியோவைப் பாதுகாப்பதற்கான ஒரு திட்டம்*

## *ஒன்ராறியோவின் **2025** வரவுசெலவுத் திட்டம்* மாகாணத்தில் தடையற்ற பொருளாதாரத்தை ஊக்குவிப்பதன் மூலம் ஒன்ராறியோவைப் பாதுகாக்க உதவும்

செய்திகள்

மே 15, 2025

றொறன்ரோ — இன்று, நிதி அமைச்சர் Peter Bethlenfalvy *ஒன்ராறியோவின் 2025 வரவுசெலவுத் திட்டத்தை* வெளியிட்டார்: *ஒன்ராறியோவைப் பாதுகாப்பதற்கான ஒரு திட்டம்*. *2025 வரவுசெலவுத் திட்டத்தில்*அமெரிக்கத் தீர்வைகள் மற்றும் தொடர்ச்சியான பொருளாதார நிச்சயமற்ற தன்மைக்கு எதிராக ஒன்ராறியோத் தொழிலாளர்கள், வணிகங்கள் மற்றும் வேலைகளைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் உள்ளன, அத்துடன், மீள்தன்மை மற்றும் சுயசார்பு கொண்ட பொருளாதாரத்தை உருவாக்குவதற்கான திட்டமும் உள்ளது. சுகாதாரப் பாதுகாப்பு, கல்வி மற்றும் பிற முக்கியமான சேவைகளில் இன்னும் அதிகமாக முதலீடு செய்யும் அதே வேளையில், G7 இல் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கும், வணிகம் செய்வதற்கும், முதலீடு செய்வதற்குப் போட்டித்திறன் மிக்க இடமாக ஒன்ராறியோவை மாற்றுவதற்கும் உரிய அரசாங்கத்தின் இலக்கை *2025 வரவுசெலவுத் திட்டம்*மேலும் விரிவுபடுத்துகின்றது.

"ஒன்ராறியோவைப் பாதுகாப்பதற்கும், தொழிலாளர்கள் மற்றும் வணிகங்கள் கடினமான சூழ்நிலைகளைத் தாங்க உதவுவதற்கும் எங்கள் அரசாங்கம் எமது ஆணையை நிறைவேற்றுகிறது, அதே நேரத்தில் வலுவான, மீள்தன்மை மற்றும் போட்டித்திறன் மிக்க பொருளாதாரத்திற்கான நீண்டகால அடித்தளங்களை உருவாக்குகிறது," என்று அமைச்சர் Bethlenfalvy கூறினார். "எதுவாக இருந்தாலும், ஒன்ராறியோவைப் பாதுகாக்கும் தொழிலாளர்கள், உட்கட்டமைப்பு மற்றும் சேவைகளில் நாங்கள் முதலீடுகளைச் செய்கிறோம்."

ஒன்ராறியோவின் நிதி ஒரு தசாப்தத்திற்கும் மேலாக அது இருந்துவரும் வலுவான நிலையிலேயே உள்ளது, இது 2024 இல் மாகாணம் பெற்ற இரண்டு கடன் மதிப்பீட்டு மேம்படுத்தல்களால் பிரதிபலித்துக் காட்டப்படுகின்றது. அரசாங்கத்தின் திட்டம் விவேகமானதாகவும் பொறுப்பானதாகவும் உள்ளது, மேலும் 2027-28 ஆம் ஆண்டுக்குள் வரவுசெலவுத் திட்டத்தைச் சமநிலைப்படுத்தும் பாதையை ஒன்ராறியோ தக்க வைத்துக் கொண்டுள்ளது. *2025 வரவுசெலவுத் திட்டம்: ஒன்ராறியோவைப் பாதுகாப்பதற்கான திட்டம்*, பொருளாதாரத்தை ஊக்குவிப்பதன் மூலமும், உட்கட்டமைப்பைக் கட்டியெழுப்பப் புதிய கட்டுமானப்பணிகளைத் தொடங்குவதன் மூலமும், ஒன்ராறியோ மக்கள் நம்பக்கூடிய சிறந்த சேவைகளை வழங்குவதன் மூலமும், ஒன்ராறியோத் தொழிலாளர்கள், வணிகங்கள் மற்றும் குடும்பங்களைப் பாதுகாக்கும் ஒரு லட்சியத் திட்டத்துடன் முன்னேறுகிறது.

சிறப்பம்சங்களில் அடங்குபவை:

- மாகாணத்தின் கனிமத் துறையின் திறனை வெளிக்கொணர உதவும் ஒரு புதிய முக்கியமான கனிமச் செயலாக்க நிதியை (Critical Minerals Processing Fund) உருவாக்க $500 மில்லியன் தொகையை முதலீடு செய்தல், இது முக்கிய கனிமச் செயலாக்கத் திறனில் முதலீடுகளை ஈர்ப்பதன் மூலம் மாகாணத்தின் கனிமத் துறையின் திறனை வெளிக்கொணர உதவும், இது ஒன்ராறியோவில் வெட்டியெடுக்கப்படும் கனிமங்கள் ஒன்ராறியோத் தொழிலாளர்களால் ஒன்ராறியோவிலேயே பதப்படுத்தப்படுவதை உறுதிசெய்ய உதவும்.

- பழங்குடியினருக்கான வாய்ப்புகள் நிதியளிப்புத் திட்டம் (Indigenous Opportunities Financing Program - முன்னர் Aboriginal Loan Guarantee Program) மூலம் மொத்தக் கடன் உத்தரவாதங்களின் அளவை மூன்று மடங்காக, $3 மில்லியன் தொகைக்கு உயர்த்தி, மின்சாரத் துறைக்கு அப்பால் தகுதியை விரிவுபடுத்தி, ஆற்றல், குழாய்வழிகள், சுரங்கம் மற்றும் முக்கியமான கனிமங்கள், வள மேம்பாடு மற்றும் பிற துறைகளில் தகுதியான திட்டங்களை உள்ளடக்கி, ஒன்ராறியோவின் வளர்ச்சியில் பழங்குடிச் சமூகங்களின் முதலீடுகளை ஆதரிக்க உதவுவதன் மூலம், பழங்குடியினரின் பங்கு கூட்டாண்மைகளுக்கான புதிய வளங்கள் மற்றும் வாய்ப்புகளை ஆதரித்தல். கனிம ஆய்வு மற்றும் சுரங்க மேம்பாடு தொடர்பான ஒழுங்குமுறைச் செயல்முறைகளில் அதிக கனிமச் செயல்பாடு உள்ள பகுதிகளில் உள்ள பழங்குடியினர் சமூகங்கள் மற்றும் நிறுவனங்களின் பங்கேற்கும் திறனை மேம்படுத்த, அரசாங்கம் நான்கு ஆண்டுகளில் பழங்குடியினர் பங்கேற்பு நிதி (Indigenous Participation Fund - முன்னர் Aboriginal Participation Fund என்று அழைக்கப்பட்டது) மூலம் $70 மில்லியனையும் முதலீடு செய்கிறது. அத்துடன் வள மேம்பாட்டில் தொழில்களைத் தொடர ஆர்வமுள்ள ஆதிக் குடிகளின் முதுநிலை மாணவர்களுக்குப் புதிய உதவித்தொகை வாய்ப்புகளை உருவாக்க, மூன்று ஆண்டுகளில் $10 மில்லியனை வழங்குகிறது.

- ஒன்ராறியோவில் உற்பத்தி அல்லது செயலாக்கத்தில் பயன்படுத்தக் கட்டிடங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களில் முதலீடு செய்யும் வணிகங்களை ஆதரித்தல், ஒன்ராறியோவில் தயாரிக்கப்படும் உற்பத்தி முதலீட்டு வரிக் கழிவை (Manufacturing Investment Tax Credit) மேம்படுத்தவும் விரிவுபடுத்தவும் முன்மொழிகிறது. முன்மொழியப்பட்ட மாற்றங்கள் கனடாவின் கட்டுப்பாட்டில் உள்ள தனியார் நிறுவனங்களுக்கான (CCPCs) வரிக் கடன் விகிதத்தைத் தற்காலிகமாக 10 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாக அதிகரிக்கும், மேலும் மாகாணத்தில் தகுதியான முதலீடுகளைச் செய்யும் பொது நிறுவனங்கள் உட்பட CCPCகள் அல்லாதவற்றுக்கு 15 சதவீத திருப்பிச் செலுத்த முடியாத கடனுக்கான தகுதியைத் தற்காலிகமாக விரிவுபடுத்தும். இந்த முன்மொழியப்பட்ட மாற்றங்கள், அடுத்த மூன்று ஆண்டுகளில் மேலதிகமாக $1.3 பில்லியன் தொகை உதவியை வழங்குவதன் மூலம் வணிகங்கள் தங்கள் செலவுகளைக் குறைக்க உதவும்.

- தீர்வையுடன் தொடர்பான குறிப்பிடத்தக்க வணிக இடையூறுகளை எதிர்கொள்ளும் வேலைகளைப் பாதுகாக்கவும், வணிகங்களை மாற்றவும், பொருளாதாரத்தின் மூலோபாயத் துறைகளை வளர்க்கவும் வணிகங்களுக்கு முக்கியமான ஆதரவை வழங்குவதற்காக உருவாக்கப்பட்ட $5 பில்லியன் வரையிலான நிதித்தொகைக்கு ஒன்ராறியோவைப் பாதுகாக்கும் கணக்கை (Protecting Ontario Account) உருவாக்குதல். கிடைக்கக்கூடிய நிதியுதவி தீர்ந்துபோன நிலையில் இருக்கும், ஒன்ராறியோ வணிகங்களுக்கு அவசரகால நிவாரணமாக இந்த நிதியுதவி உடனடியான பணப்புழக்க நிவாரணத்தை வழங்கும்.

- மாகாணம் முழுவதும் உள்ள திறமையான தொழிலாளர்கள் முன்னுரிமைத் துறைகளில் பலனளிக்கும் தொழில்களில் நுழைவதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதை உறுதிசெய்து, அடுத்த மூன்று ஆண்டுகளில் திறன் மேம்பாட்டு நிதி மூலதனம் மற்றும் பயிற்சி நீரோட்டங்களில் (Skills Development Fund Capital and Training Streams) மேலதிகமாக $1 பில்லியனை முதலீடு செய்து, மொத்த நிதி உறுதிப்பாட்டை $2.5 பில்லியனாகக் கொண்டுவருதல். இந்த முதலீடுகள் யாவும், நிறுவனங்கள் சிறந்த பயிற்சித் திட்டங்களை வழங்கவும், மாகாணம் முழுவதும் திறமையான தொழிலாளர்களுக்கான புதிய பயிற்சி மையங்களை மேம்படுத்தவும் கட்டமைக்கவும் உதவும்.

- மாகாணத்தின் பெட்ரோல் மற்றும் எரிபொருள் வரிக் குறைப்புகளை நிரந்தரமாக்க முன்மொழிதல். இந்த நடவடிக்கை, குடியிருப்பாளர்களுக்குச் சராசரியாக, ஆண்டுக்கு சுமார் $115 வரை சேமித்துக் கொடுக்கக்கூடும்.

- மாகாணத்திற்குச் சொந்தமான நெடுஞ்சாலை 407 கிழக்கு சுங்கச்சாவடியில் இருந்து சுங்கச்சாவடிகளை நிரந்தரமாக நீக்குவதன் மூலம், போக்குவரத்து நெரிசலை எதிர்த்துப் போராட உதவுதல், இது தினசரிப் பயணிகளுக்கு ஆண்டுதோறும் சுமார் $7,200 வரை சேமித்துக் கொடுக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

- ஒன்ராறியோவின் வரலாற்றில் மிகவும் லட்சிய மூலதனத் திட்டம் உட்பட, 2025-26 இல் $33 பில்லியனுக்கு அதிகமான தொகையையும் உள்ளடக்கி, அடுத்த 10 ஆண்டுகளில் மொத்தம் $200 பில்லியனுக்கும் அதிகமான திட்டமிடப்பட்ட முதலீடுகளுடன், மாகாணத்தின் கட்டுமான முயற்சிகளை இரட்டிப்பாக்குதல். 10 ஆண்டு மூலதனத் திட்டத்தின் சிறப்பம்சங்களில், நெடுஞ்சாலை விரிவாக்கம் மற்றும் மறுசீரமைப்புத் திட்டங்களைத் திட்டமிடுவதற்கும் நிர்மாணிப்பதற்கும் கிட்டத்தட்ட $30 பில்லியன் தொகை, பொதுப் போக்குவரத்திற்குக் கிட்டத்தட்ட $61 பில்லியன் தொகை, சுகாதார உட்கட்டமைப்பில் கிட்டத்தட்ட $56 பில்லியன் தொகை மற்றும் அதிகமான பாடசாலைகள் மற்றும் சிறுவர் பராமரிப்பகங்களை உருவாக்க $30 பில்லியனுக்கும் அதிகமான முதலீடு ஆகியவை உள்ளடங்கும்.

"எங்கள் மாகாணம் இதற்கு முன்பும் பல சவால்களை எதிர்கொண்டுள்ளது, இதன் விளைவாக இன்னமும் அதிக வலுவும் ஒற்றுமையும் உள்ளவர்களாக எப்போதும் நாங்கள் எழுந்துள்ளோம்," என்று அமைச்சர் Bethlenfalvy கூறினார். “இன்று, *2025 வரவுசெலவுத் திட்டத்துடன்: ஒன்ராறியோவைப் பாதுகாப்பதற்கான ஒரு திட்டத்தின்* மூலம், ஒன்ராறியோத் தொழிலாளர்கள், வணிகங்கள் மற்றும் சமூகங்களைப் பாதுகாக்கத் தேவையான அனைத்தையும் செய்வதற்கு இந்தச் சிறந்த மாகாணத்தின் மக்களிடமிருந்து நாங்கள் பெற்ற ஆணையையும் அரசாங்கத்தின் தொலைநோக்குப் பார்வையையும் பிரதிபலிக்கும் ஒரு திட்டத்தை நாங்கள் முன்வைத்துள்ளோம்."

## *விரைவுச் செய்திகள்*

- ஒன்ராறியோவின் 2024-25 பற்றாக்குறை $6.0 பில்லியனாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது - இது *2024 வரவுசெலவுத் திட்டத்தில்* வெளியிடப்பட்ட மதிப்பீட்டை விட $3.8 பில்லியன் குறைவாகும்.

- அரசாங்கத்தின் திட்டம் விவேகமானதாகவும் பொறுப்பானதாகவும் உள்ளது மற்றும் 2027-28 க்குள் வரவுசெலவுத் திட்டத்தைச் சமநிலைப்படுத்தும் பாதையைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது. 2027-28 இல் $0.2 பில்லியன் என்று முன்னறிவிக்கப்பட்ட மேலதிகத் தொகைக்குத் திரும்புவதற்கு முன்பு, 2025-26 இல் $14.6 பில்லியனையும், 2026-27 இல் $7.8 பில்லியனையும் பற்றாக்குறையாக அரசாங்கம் கணித்துள்ளது.

- GDPயானது நிஜமாகவே1.5 சதவீதத்தால் அதிகரித்த நிலையில் ஒன்ராறியோவின் பொருளாதாரம் 2024 இல் மீள்தன்மையுடன் இருப்பதாக நிரூபிக்கப்பட்டது. ஒன்ராறியோவின் உண்மையான GDP 2025இல் 0.8 சதவீதத்தாலும், 2026இல் 1.0 சதவீதத்தாலும், 2027 மற்றும் 2028களில் 1.9 சதவீதத்தாலும் உயரும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

- ஒன்ராறியோவின் நிகர கடன்- GDP விகிதம் 2025-26 இல் 37.9 சதவீதமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இடைப்பட்ட காலத்தில், நிகர கடன்-GDP விகிதம் 2026-27 இல் 38.9 சதவீதமாகவும், 2027-28 இல் 38.6 சதவீதமாகவும் இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

## மேலதிக வளங்கள்

*வாசிக்கவும் 2025 வரவுசெலவுத் திட்டம்: ஒன்ராறியோவைப் பாதுகாப்பதற்கான ஒரு திட்டம்*

*வாசிக்கவும் 2025 வரவுசெலவுத் திட்டத்தின் சிறப்பம்சங்கள் ஒன்ராறியோவைப் பாதுகாப்பதற்கான ஒரு திட்டம்*

வாசிக்கவும் பின்புலம் (Backgrounder): பொருளாதார மற்றும் நிதிக் கண்ணோட்டம்

---

## ஊடகத் தொடர்புகள்

Colin Blachar
மைச்சர் அலுவலகம்
Colin.Blachar@ontario.ca

Scott Blodgett
கவற் தொடர்புப் பிரிவு
Scott.Blodgett@ontario.ca

news.ontario.ca/mof/en
Disponible en français